5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற முறையில், கல்வி (ஆரம்ப உயர்தரக் கல்வி) பற்றிய அறிக்கையில் கண்டுள்ள குழுவின் பரிந்துறைகளின் மீது அரசு மேற்கொண்டு நடவடிக்கை பற்றிய மேற்படிக் குழுவின் ஆறாவது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அரசினர் தீர்மானம்

விதி 30 (3) ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ஐ தளர்த்தி, பேரவையின் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4, அரசினர் சட்ட முன்வடிவுகள் என்பதன் கீழ் வருகின்ற சட்ட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 29]

முன்வடிவுகளை கீழ்க்கண்ட வரிசைப்படி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்:

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981).

(2) 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981).

(3) 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர் கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981).

(4) தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981).

(5) பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981).

(6) 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981).

(7) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981).

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ). இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, தமிழ்நாடு 1959 ஆம்ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு இங்கே மூன்று நோக்கங்களுக்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். இப்போது இருக்கின்ற அறநிலையக் கட்டுப்பாட்டில் மடங்கள் அடங்கி இருந்தாலும்

* 1981—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.